விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 13 ஞாயிற்றுக்கிழமை (25.02.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 68

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## நான்காவது நாளாக தொடரும் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதம்

(கொழும்பு)

மகசின் சிறைச்சாலையில் அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் எவ்வித விசாரணைகளு மின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ள 20 தமிழ் அரசியல் கைதிகளின் சாகும்வரை உண்ணா நிலைப்போராட்டம் நேற்று நான்காவது நாளாக தொடர்ந்தது. போர் நிறுத்த உடன் படிக்கை அமுலில் உள்ள காலப்பகுதியில் கைதான குறிப்பிட்ட தமிழ் அரசியல் கைதிகள் வடக்கு-கிழக்கு, மலையகம் மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

எவ்வித விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தங்களை விடுதலை செய்ய வேண்டும் அல்லது (04 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் மூன்று முகாம்கள் இராணுவத்தால் தாக்கியழிப்பு

### ஊடக மத்திய நிலையம் தெரிவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை நகரிலிருந்து 20 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் இருக்கின்ற கரையோரப் பிரதேசமாக அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் மூன்று பாரிய முகாம் கள் மீது நேற்று காலை இராணுவத்தினரால் பல முனைத் தாக்குதல் நடாத்தப்பட்டு அங் குள்ள விடுதலைப்புலிகளின் முகாம்களை நிர்மூலமாக்கியதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் (04 ஆம் பக்கம் பார்க்க)

# மகிந்தவுக்கும் பிரபாகரனுக்குமிடையில் தேர்தலுக்கு முன் ஒப்பந்தம் கைச்சாத்து

## ஐ.தே.க.எம்.பி.அம்பலம்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு மிடையில் ஒப்பந்தமொன்று செய்துகொள்ளப்பட்டிருந்தது என்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார். யானைக்கும் புலிக்குமிடையில் ஒப்பந் தம் இருப்பதாக கூறியவர்கள் தாமே ஒப்பந்தம் செய்துள் ளார்கள் என அவர் கூறினார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தின் தீர்வு யோசனைகள் ஏப்ரலில் முன்வைக்கப்படவுள்ளன

### சிங்கள வார ஏடு தகவல்

அரசாங்கத்தின் தீர்வு யோசனைகள் எதிர் வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் வைக்கப் படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ இது குறித்து யப்பானிய அரசாங் கத்திடம் உறுதியளித்துள்ளதாக சிங்கள வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த 17 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை யப்பானில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த அவர் யப்பா னிடம் இருந்து 4 ஆயிரம் கோடி ரூபா கடனு தவியைப் பெறும் சாதகமான உறுதிமொழி களை பெற்றுக்கொண்டுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு துரிதமான அரசியல் தீர்வொன்று முன்வைக் கப்பட்டு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தி னால் மாத்திரமே இந்த கடனுதவி வழங்கப் படும் என்று யப்பான் தரப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளதாகவும் அவ் வார இதழில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச-3)

## கண்காணிப்புக் குழு அலுவலகம் வவுனியாவில் மூடப்படவில்லை

### பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியாவில் அதிகரித்திருக்கும் வன் முறைகள் காரணமாகப் போர் நிறுத்தக் கண் காணிப்புக் குழுவினர் தமது அலுவலகத்தை மூடிவிட்டுக் கொழும்புக்குப் புறப்பட்டிருப்ப தாக ஊடகங்களில் வெளியான செய்தியில் உண்மையில்லை என இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள் ளது.

தமது உறுப்பினர்கள் அலுவலகத்தை மூடி விட்டு வரவில்லை எனத் தெரிவித்திருக் கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தொர்பினூர் ஓமர்சன் வவுனியா வின் தற்போதைய நிலைமைகள் மற்றும் பாதுகாப்புச் சூழ்நிலைகள் குறித்து ஆராய் வதற்காகவே (04 ஆம் பக்கம் பார்க்க)

## வன் செயல்களில் இருந்து நாட்டை மீட்க உகந்த சூழ்நிலையை ஏற்படுத்துங்கள்

### இலங்கை சமாதானப் பேரவை வேண்டுகோள்

(கொழும்பு)

2002 ஆம் ஆண்டு செய்து கொள்ளப் பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இரு தசாப்த கால யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப் பட்டது. கடந்த ஓராண்டில் மட்டும் இப் பிராந் தியத்தில் கொல்லப்பட்டோரின் தொகை 4 ஆயிரத்தைத் தாண்டிவிட்டது.

ஆனால், 2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் உள்ள 20 ஆண்டு காலத்தில் சராசரியாக கொல்லப் பட்டோரின் எண்ணிக்கையை இது தாண்டி விட்டது என இலங்கை தேசிய சமாதான பேரவையினால் நடாத்தப்பட்ட சமாதானம் தொடர்பான கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டு ள்ளதாக மேற்படி பேரவையினால் வெளி யிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

நாட்டினை (04 ஆம் பக்கம் பார்க்க)

## கணனியில் தயாரிக்கப்பட்ட அ.அட்டை மீனவர்களுக்கு வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு விசேட அடையாள அட்டைகளை விநியோ கிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நீர் வள மீன்பிடித்துறை அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத் தவும் கடலில் அவர்கள் எதிர்கொள்ள நேரி டும் சிரமங்களை தவிர்க்கவும் இந்த நடவடிக் கை எடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நவீன தொழில் (04 ஆம் பக்கம் பார்க்க)

## சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களுக்கு வயிற்றோட்டம்

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் 80 இற்கும் மேற்பட்டோர் கடந்த மூன்று நாட் களாக வயிற்றோட்டம் காரணமாக பலாங் கொடை பொது வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

இங்கு விநியோகிக்கப்படும் நீரினை பரு கியதால் மாணவர்களுக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிப்பதாக பல் கலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பல்கலைக்கழகத்திற்கு பலாங்கொடை மற்றும் பெலிபுல்லோயா போன்ற இடங்களில் இருந்து பௌசர் மூலம் நீர் விநியோகிக்கப் படுகின்றது. இது பரீட்சைக்காலம் எனினும் இவர்களால் (04 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு நேர்மையுடன் செயற்பட்டால் அமைச்சுப் பதவிகளை ஏற்காமல் ஆதரவு வழங்க கூட்டமைப்பு தயார்

### கிஷோர் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

நேர்மையான முறையில் இனப்பிரச்சி னைத் தீர்வுக்கான முன்னெடுப்புக்களை அரசாங்கம் மேற்கொள்ளுமாக இருந்தால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு வழங்கும் என்று கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.சிவநாதன் கிஷோர் சபையில் தெரிவித்தார்.

படுகொலை செய்யப்பட்ட ரவிராஜ் எம்.பி யின் அனுதாபப் பிரேரணையின் மீது நேற்று முன்தினம் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது; இனப்பிரச்சினைத் தீர்வுக் காக அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க வேண்டு மெனக் கூறி ஐ.தே.கவின் சில எம்.பிக்கள் அரச பக்கம் சென்றிருக்கின்றனர்.

உண்மையில் அவர்கள் அமைச்சுப் பொறுப்புக்களை பெறுவதற்காகவே. அரசுக்கு ஆதரவு (04 ஆம் பக்கம் பார்க்க)

# வலுவிழந்தோருக்கான வாழ்க்கை தொழிற்பயிற்சி

வலுவிழந்தோருக்கான (விசேட உதவி தேவைப்படுபவர்) தொழிற்பயிற்சிக்காக அமைச்சினால் 82 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கே.தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்நிதியினைக் கொண்டு வலுவிழந்தோருக்கு 32 வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நெறிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கு விண்ணப்பிப்போர் தாம் விரும்பும் நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் பிரதேச செயலக ரீதியாகக் கோரப்படுவதுடன் இப் பயிற்சியில் ஈடுபடுபவர்களுக்கு பயிற்சிக் கால ஊக்குவிப்புக் கொடுப்பனவும் கற்பித்தல் உபகரணங்களும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக அவர் மேலும் கூறினார்.

இதேவேளை இப் பயிற்சிநெறி வழங்குவதற்கான போதனாசிரியர் வெற்றிடங்கள் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-3)

# விடுதலைப்புலிகளுக்கு ஆயுத விநியோகம் இந்தோனேஷியர் அமெரிக்காவில் கைது

(வாஷிங்டன்)

விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தொழிற் நுட்பங்களை விநியோகம் செய்த அமெரிக்க வாழ் இந்தோனேஷியருக்கு அமெரிக்க நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்துள்ளதாகச் செய்திகள் தெரிவித்தன.

இந்தோனேஷியக் கடற்படையில் பணியாற்றி ஓய்வு பெற்ற எரிக் வோடுலோ (வயது-59) என்பவர் அமெரிக்காவிலுள்ள பால்டிமோரில் வசித்து வந்தார்.

இவரை அமெரிக்க அரசு கடந்த 2006 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கைது செய்தது. இவர்மீது நீதிமன்ற விசாரணை நடந்து வந்தது.

இந்நிலையில் நேற்று இறுதித் தீர்ப்பைக் கூறிய அமெரிக்க நீதிமன்றம் ஆயுதங்கள் விநியோகம் செய்த குற்றத்திற்காக அதிக பட்சம் 15 வருட சிறைத் தண்டனையும்பண மோசடி செய்ததற்கு அதிகபட்சம் 20 வருட சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்துள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# நீதியமைச்சரும் சட்டமா அதிபரும் சிறைச்சாலைக்கு வர வேண்டும்

## உண்ணாவிரதத்தில் ஈடுபடும் கைதிகள் கோரிக்கை

(கொழும்பு)

நீதியமைச்சர் டிலான் பெரேராவும் சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசனும் தமது குறைகளைக் கேட்டறிவதற்குச் சிறைச்சாலைக்கு வருகை தரவேண்டும் என்று புதிய மகசீன் சிறைச்சாலையில் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறுகோரி தமிழ் அரசியல் கைதிகள் 21 பேர் கடந்த புதன்கிழமை முதல் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

உண்ணா விரதம் இருந்து வரும் கைதிகளை மலையக மக்கள் முன்னணியின் எம்.பியும் பிரதியமைச்சருமான பெ.இராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் சிறைச்சாலைக்கு விஜயம் செய்து பார்வையிட்டார்.

இச் சந்தர்ப்பத்திலேயே கைதிகள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கான உறுதியான முடிபு கிடைக்கும்வரை தமது போராட்டம் தொடரும் என பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணனிடம் தெரிவித்த கைதிகள், நீதியமைச்சரையும் சட்டமா அதிபரையும் சிறைச்சாலைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரியுள்ளனர்.

இதனையடுத்து நீதியமைச்சர் டிலான் பெரேராவுடன் தொடர்பு கொண்ட பிரதியமைச்சர் கைதிகளின் கோரிக்கையினை எடுத்துக் கூறியுள்ளார். கைதிகளின் விடுதலை தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் உறுதியளித்துள்ளார். (ச-5)

# வவுனியாவில் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா வேப்பங்குளம் எட்டாம் ஒழுங்கையில் கைகள் கட்டப்பட்ட நிலையில் சூட்டுக் காயங்களுடன் நேற்று இளைஞர் ஒருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இச் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-3)

# 8 ஆம் திகதி ஓய்வூதியம்

(ஊர்காவற்றுறை)

அரச ஓய்வூதியர்களுக்கான பங்குனி மாத ஓய்வூதியம் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை வழங்கப்படுமென ஓய்வூதியத் திணைக்களம் அறிவித்துள்ளது.(ச-72)

# மத்தியஸ்தர் பரீட்சை பெறுபேறு வெளியாகியது

இலங்கை வலைப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட மத்தியஸ்தர் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இப் பரீட்சையில் 33 பேர் சித்திபெற்றுள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு,

*தரம் 'ஏ' சித்தி*

திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம், செல்வி அ.இராதை, செல்வி சி.சுரேந்தினி,

*தரம் 'பி' சித்தி*

திருமதி ஜே.சரவணபவ ஐயர்,திருமதி அ.பவானி, எஸ்.அகிலன், கே.கனகராஜா, திருமதி கு.உதயசுதர்ஷினி.

*தரம் 'சி' சித்தி*

த.வினோதா, பு.தினேஸ்குமார், கி.றீகன், த.குமார்,ஆ.கமலகுமாரன், கே.கிருபானந்தன்,அ.அனுஷன், எஸ்.சுகிதன், ரி.தவசெல்வம், ஜே.அனுஸ்தாஸ், கே.அகிலா , பி.ஜெயகரன், கே.கார்த்திகா , ஆர்.சிறிரமணன், சி.சிவசெல்வம், பு.றோகினி,எஸ்.சிவபாலசுந்தர், ந.செந்தூரன், எல்.சக்கிகுமார், எஸ்.அஜிதரன், பி.ராதா, எஸ்.சுரேன், கே.ஜெயகாந்தன், எஸ்.தீபா , தி.கௌரி

சித்தியடைந்த அனைவரும் சங்கச் செயலாளரிடம் தமது பெயர்ப் பதிவுகளை உறுதி செய்து கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் திருமதி ஏ.எவ். ஜே.ரூபசிங்கம் தெரிவித்தார்.

இப் பரீட்சையில் 'ஏ' தரத்தில் சித்தி பெற்றவர்களுக்கு தங்கப் பதக்கமும் 'பி' தரத்தில் சித்தி பெற்றவர்களுக்கு வெள்ளிப் பதக்கமும் 'சி' தரத்தில் சித்தி பெற்றவர்களுக்கு வெண்கலப் பதக்கமும் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச-3)

# பட்டதாரி ஆசிரியர்கள் போட்டிப் பரீட்சை விண்ணப்ப திகதியை நீடிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தேசிய பாடசாலைகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பட்டதாரிகளான ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை விண்ணப்ப இறுதித் திகதியைப் பின் தள்ளிப் போடுமாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்குக் கிழக்கு விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதற்கு வசதியாக விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் தினத்தைப் பொருத்தமான முறையில் பின்தள்ளிப் போடுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் எம்.சரவணபவானந்தன் கல்வி அமைச்சரிடம் மகஜர் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப் பிக்க வேண்டிய இறுதித்தினம் மார்ச் 9 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அதிக விலைக்கு பொருள்களை விற்ற யாழ்.வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கட்டுப்பாட்டு விலைகளுக்கு அதிகமான விலையில் பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா நேற்று யாழ்.நகரிலுள்ள வர்த்தக நிலையங்களுக்குத் திடீர் விஜயம் செய்துள்ளார்.

இதன்போது அத்தியாவசிய பொருள்களை அதிக விலைக்கு விற்பனை செய்த 3 வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளார்.

இம் மூன்று வர்த்தகர்களையும் நாளை நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிவான் உத்தர விட்டுள்ளார். குறித்த வர்த்தகர்களில் ஒருவர் கச்சான் பருப்பு ஒரு கிலோக்கிராம் 500 ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

# புதிதாக கட்டடம் திறந்து வைப்பு

ஈச்சமோட்டையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பணிமனையின் திறப்பு விழா கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தை இந் நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ்.பிரதேச செயலர் ப.செந்தில்நந்தனனும் யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவவும் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தனர். (ச-110)

# 15 குதிரை வலுக் கொண்ட படகுகளை மீன்பிடிப்பதற்குப் பயன்படுத்தத் தடை

வடக்குக் கிழக்கில் 15 மற்றும் 25 குதிரை வலுக் கொண்ட படகுகளில் வெளியிணைப்பு இயந்திரங்களைப் பயன்படுத்த மீனவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சென்ற ஆண்டு டிசம்பர் 29 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் இது குறித்து அறிவுறுத்தப்பட்டுள்ளது.

9.9 குதிரை வலுக் கொண்ட வெளியிணைப்பு இயந்திரங்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மன்னார் மாவட்டக் கடற்றொழிலாளர்களிடம் 15 மற்றும் 25 குதிரை வலுக் கொண்ட படகு வெளியிணைப்பு இயந்திரங்களேயிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வியந்திரங்களுக்குத் தடை விதிக்கப்பட்ட நிலையில் மன்னார் சுகவாழ்வு மன்றத்தில் நேற்றுக் கூடிய கடற்றொழிலாளர்கள் தமது இயந்திரங்களை மாற்றம் செய்ய அரசாங்கத்திடமிருந்து ஆறு மாத அவகாசத்தை பெற்றுத்தருமாறு அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-3)


## சிறு விளம்பரங்கள்

*உங்கள் தேவைக்கு*

ஒரே குடையில் Ku பான்ட் C பான்ட் இணைக்க வேண்டுமா? டிஸ் அன்ரனா றிசிவர் பழுது பார்க்க வேண்டுமா? வீட்டு மின் இணைப்புக்கள் நேர்த்தியான முறையில் செய்து கொடுக்கப்படும்.தொடர்பு:- போன் நம்பர்-077 6232925 M.யூட். (622)

*கார் விற்பனைக்கு*

டாக்டர் ஒருவரின் தனிப்பட்ட பாவனையில் உள்ள புத்தம்புதிய Maruti- Wagan-R கார் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 'இராஜஸ்தான்', சிவராஜா அவென்யூ, தபால் பெட்டிச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி. (Music World முன்பாக) (633)

*விற்பனைக்கு*

Washing Machine, Fridge, Kitchen unit, மேசைகள் N.P.G.O xxxx Hero Honda Motor bike (Passion) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 'இராஜஸ்தான்', சிவராஜா அவென்யூ, தபால் பெட்டிச்சந்தி, பலாலி வீதி, திரு நெல்வேலி. (Music World முன்பாக) (633)




இலங்கை வங்கியின் காங்கேசன்துறைக் கிளையின் புதிய கட்டடம் மல்லாகத்தில் திறந்து வைக்கப்பட்டது. அந் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பீ.ஏ.அருமைநாயகம் கட்டடத்தைத் திறந்து வைப்பதனைப் படத்தில் காணலாம்.




வருசப் புலம் மகாமாரி அம்பாள் மஹோற்சவம்

நான்காம் திருவிழா

25.02.2007 ஞாயிறு

பூசுரரும் ஆவினமும் வாழி வாழி பூமாரி பொழிந்திந்தப் புவியும் வாழி
தேசுமிகு செங்கோலின் நெறியும் வாழி திருமகளிர் கற்புநெறி ஞானம் வாழி
பேசுதமிழ் மொழிவாழி சைவம் வாழி புவியெல்லாம் மாரியருள் பொலிந்து வாழி
வீசுதமிழ் மணவரியப் புலமும் வாழி விளங்குதிரு மகாமாரி வாழி வாழி (629)

> கொள்ளைக்காரன் பணக்காரர்களைக் கொள்ளையடித்து ஜீவனம் செய்கின்றான். கறுப்புச் சந்தைக்காரன் ஏழையைக் கொள்ளையடித்து ஜீவனம் செய்கின்றான்.
>
> –பெர்னார்ட்ஷா

வலம்புரி

# கொள்ளை இலாபம் ஈட்டும் கொடூரம் நீங்குமா?

அதிகூடிய விலையில் பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா தண்டப்பணம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

அவரின் தீர்ப்பில் யாழ்.அரச அதிபரினால் அறிவிக்கப்பட்ட விலைகளை மீறி உயர்ந்த விலையில் பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கூறியுள்ளார்.

நீதிபதியின் மேற்போந்த எச்சரிக்கை காலத்தின் அவசர தேவையானதாகும். யாழ்.குடாநாட்டு மக்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவிக்கும் போது அதிகூடிய விலையில் பொருள்களை விற்பனை செய்வது மிகப் பெரும் கொடூரமாகும்.

இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இதனையே நீதிபதி இ.த.விக்னராஜா அவர்களின் தீர்ப்பு சுட்டிக்காட்டுகின்றது.

வர்த்தகர்கள் இலாபம் ஈட்ட வேண்டுமென்பதில் இருவேறு கருத்துக்கிடமில்லை. அதேநேரம் இக்கட்டான சூழ்நிலையில் அவர்களின் வர்த்தக சேவைக்கு இரு கரம் கூப்பி வணக்கம் செலுத்துகின்றோம்.

அதற்காக நியாயமும் அடிப்படை மனிதாபிமானமும் அற்ற வகையில் பொருள்களை அதிகூடிய விலையில் விற்பனை செய்வது தமிழ் மக்களை நசுக்கும் நாசகார சக்திக்கு ஒப்பானதாகும்.

அதேநேரம் இது விடயத்தில் வர்த்தக சங்கங்கள் விலைக் கட்டுப்பாட்டை அனுசரிக்குமாறு தமது உறுப்பினர்களுக்கு அறிவுரை கூறுவது சங்கத்தின் கடமைகளில் ஒன்று.

பொருள் தட்டுப்பாடு நிலவுகின்ற போது வர்த்தக சங்கங்களின் வரையறைகளை உறுப்பினர்கள் மீறுவது தவிர்க்க முடியாததாயினும் 'வர்த்தகம்' என்ற சொற்பதம் 'அநீதி' என்றோ அன்றி 'இரக்கமற்றது' என்றோ பொருள் கொண்டதல்ல என்பது உய்த்துணர்தற்குரியது.

உலகம் முழுவதையும் இணைக்கின்ற, உலக வாழ் மக்களின் தேவைகளை நிறைவு செய்கின்ற சேவையாகவிருக்கும் வர்த்தகத்துறை நேர்மையுடன் வளர்த்தெடுக்கப்பட வேண்டியதொன்று.

ஏழை மக்களைச் சுரண்டுவது, அவர்களின் வயிற்றில் அடிப்பது என்பன வர்த்தகத்துறையின் வளர்ச்சிக்குப் பாதகமாகவே அமையும்.இதுபற்றி யாழ்.வர்த்தகர்கள் சிந்திக்க வேண்டும்.

2006 ஆகஸ்ட் மாதம் பதினொராம் திகதிக்குப் பின்னர் யாழ்.குடாநாட்டிற்கு எடுத்து வரப்படாத- ஏற்கனவே கையிருப்பிலிருந்த பொருள்களுக்கு யாழ்.வர்த்தகர்கள் சிலர் நிர்ணயித்த விலை மிக மோசமானதாகும்.

இவை 'தொழில் மகத்துவம்' என்ற உயரிய பண்பை மீறி அதர்மம் என்ற மையத்தில் நிலை பெறுவதாகும்.

எனவே இப்பகுதியில் நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டிய விடயம் தர்மத்தின் வழியில் வர்த்தக சேவையை ஆற்றுங்கள். இந்தக் கோரிக்கை பொது மக்கள் சார்பானது. இதற்குத் தெருவோர வியாபாரிகளும் விதிவிலக்கானவர்கள் அல்ல.

அதேசமயம் நீதிமன்றில் தண்டம் பெற்றவர்கள் ஒரு சிலரே. இத் தண்டமானது ஏனையவர்களின் திருத்தத்திற்கான எச்சரிக்கையாகும்.

ஆகவே யாழ்.குடாநாட்டு வர்த்தகர்கள் யாழ்.மாவட்ட நீதிபதியின் எச்சரிக்கையைக் கருத்தில் கொண்டு தமது சேவையை ஆற்ற வேண்டும்.

# தமிழகத்தில் கைதானவர்களிடம் விசாரணை நடத்துவதற்கு அனுமதி கோரும் இலங்கை

விடுதலைப்புலிகளின் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தமிழக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ள நபர்களை விசாரணை செய்வதற்கான அனுமதியை வழங்க வேண்டுமென இந்தியாவிடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழக அதிகாரிகளால் கடந்த வாரம் நடுக்கடலில் வைத்துக் கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணை நடத்தவே இந்திய அரசிடம் இலங்கை அனுமதி கோரியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

கடற்புலிகளுக்குச் சொந்தமானது என சந்தேகிக்கப்படும் படகொன்றை கடந்த 13 ஆம் திகதி நடுக்கடலில் வழிமறித்த இந்தியக் கடலோரக் காவல்படையினர் அதிலிருந்து விடுதலைப்புலிகளின் உறுப்பினர் உட்பட ஐவரையும் கைது செய்து தமிழகப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அந் நபர்களிடம் இந்திய அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணையில் இப் படகினுள் தொலைவிலிருந்து இயக்கும் கருவிகள் மூலம் வெடிக்க வைக்கக் கூடிய வெடி பொருள்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது. இந்நிலையில் கைதானவர்களை விசாரிக்க அனுமதிக்க வேண்டுமென இலங்கை கோரியுள்ளது. (எ-1)

# 5 மில். ரூபாவை குடும்பத்திற்கு வழங்கி விட்டு ரவிராஜின் கொலையை அரசு ஏற்கின்றதா?

## சபையில் ரவி கருணாநாயக்க எம்.பி. கேள்வி

(கொழும்பு)

ரவிராஜ் எம்.பியின் குடும்பத்திற்கு ஐந்து மில்லியன் நிதியை வழங்கிவிட்டு அவரின் படுகொலையை அரசாங்கம் ஏற்றுக் கொள்கின்றதா? என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பி. ரவி கருணாநாயக்க சபையில் கேள்வி எழுப்பினார்.

படுகொலை செய்யப்பட்ட ரவிராஜ் எம்.பியின் அனுதாப பிரேரணையில் உரையாற்றும் போதே ரவி கருணாநாயக்க எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது;

கடந்த காலங்களிலிருந்து இதுவரை 10ஆயிரம் கோடி ரூபாவரை பாதுகாப்புக்காகச் செலவிடப்பட்டிருப்பதாகவும் ஆனாலும் பாதுகாப்பு நடைமுறைகள் சீரானதாக இல்லை எனவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா முன்னர் இந்தச் சபையில் கூறியிருந்தார்.

ரவிராஜ் எம்.பி., ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. உட்பட சமீப காலங்களில் இடம்பெற்ற கொலைகளை பார்க்கின்ற போது அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறியது சரியானதாகவே இருக்கின்றது.எவ்வாறாயினும் இந்த அரசு பதவியேற்ற காலத்திலேயேதான் படுகொலைகள் அதிகரித்துள்ளன.

ரவிராஜ் எம்.பியின் கொலை தொடர்பான விசாரணை உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை. ஐந்து மில்லியனை அவரது குடும்பத்திற்கு வழங்கிவிட்டு அவரின் படுகொலையை அரசு ஏற்றுக்கொள்கின்றதா? முரண்பாட்டு அரசியலை நீக்கிய ஐக்கியமானசெயற்பாட்டிற்கு ரவிராஜ் வழிவகுத்தார் என்றார். (எ-1)

# இராணுவம் மீது தாக்குதல் தொடர்ந்தால் தொப்பிக்கலவில் பதில் தாக்குதல் நடக்கும்

## இராணுவப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

தொப்பிக்கலப் பகுதியிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குக் கடந்த சில தினங்களாகப் பொதுமக்கள் எவரும் வருகை தரவில்லை. எனினும் புலிகள் இராணுவ நிலைகள் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டால் தொப்பிக்கல மீது பதில் தாக்குதல்கள் நடத்தப்படும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் எஸ்.ஏ. பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

தொப்பிக்கலப் பகுதியிலிருந்து அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு 2 ஆயிரத்து 900 பேர் வருகை தந்துள்ளனர். கடந்த சில தினங்களாக அந்தப் பகுதியிலிருந்து பொது மக்கள் எவரும் வருகை தரவில்லை என்பதால் பொதுமக்களைப் புலிகள் தடுத்து வைத்திருக்கக் கூடும்.

அத்துடன் புலிகள் அப்பகுதிகளிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கித் தாக்குதல் நடத்துகின்றனர். அந்த தாக்குதல்கள் தொடர்ந்தால் தொப்பிக்கலப் பகுதியின் மீது பதில் தாக்குதல்கள் நடத்தப்படும்.

கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினர் கைப்பற்றிய பகுதிகளில் சிவில் நிர்வாகத்தினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வாகரைப் பகுதியிலிருந்து 13 கிராம சேவையாளர் பிரிவினுள் 9 கிராம சேவையாளர் பிரிவுகளில் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் மக்கள் மீளக் குடியேற்றப்படுவார்கள்.ஏனைய பகுதிகளில் கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் தொடர்கின்றன.

அத்தோடு ஏ-15 வீதி புனரமைக்கப்பட்டு வாகரைக்கு மின்சார வசதி பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி மூடப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பெப்ரவரி 19 ஆம் திகதி மீண்டும் திறக்கப்பட்டது. ஆனால் அங்கு ஹர்த்தால்கள் இடம்பெறுவதாக ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன என்றார். (ச-5)

# உடன்படிக்கை குறித்த அரசாங்கத்தின் மௌனம் அதனை ஏற்றுக் கொண்டுள்ளதைக் காட்டுகிறது

## ரவீந்திர எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையிலிருந்து உத்தியோகபூர்வமாக விலக வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகின்ற போதும் அரசாங்கமும் ஜனாதிபதியும் தொடர்ந்து மௌனம் காத்து வருகின்றனர்.

இந்த மௌனம் ரணில் விக்கிரமசிங்க செய்த ஒப்பந்தம் நூற்றுக்கு 200 வீதம் சரியானது என்பதையே எடுத்துக்காட்டுகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவீந்திர சமரவீர தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் மேலும் தெரிவித்ததாவது;

அரசாங்கத்தின் அமைச்சரவை மாற்றம் ஏற்பட்ட அன்றே அரசாங்கத்தின் முடிபு ஆரம்பமாகிவிட்டது. ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 18 பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்ததையடுத்தே அரசாங்கம் பலம் அடைந்துள்ளதாகக் கூறுகின்றனர்.ஆனால் இன்று அது தலைகீழாக மாறியுள்ளது.

அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்திய பின் பல்வேறு சிக்கல்கள் தோன்றியிருந்தன. அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சுக்களின் கீழுள்ள நிறுவனங்கள் தொடர்பான வர்த்தமான அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னரே நிலைமை மேலும் சிக்கல் அடைந்துள்ளது.

ஏற்கனவேயிருந்த பல நிறுவனங்கள், கூட்டுஸ்தாபனங்கள் ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதன்போது காணி மறுசீரமைப்பு நிறுவனம் ஜனாதிபதியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தில் ஊழல் இடம்பெற்றிருந்ததனால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது.எனினும் அந்த நிறுவனம் முன்னர் யாரிடம் இருந்தது என்பதை மறந்துவிட முடியாது.

காணி மறுசீரமைப்பு நிறுவனம் ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டதால் காணி தொடர்பான பிரச்சினைகள் குறித்து பிரதேச செயலாளர்களுக்கு ஜனாதிபதியிடம் முறையிட முடியுமா? அல்லது ஆலோசனைகளைப் பெற முடியுமா?

அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சனம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் வர்த்தக வாணிபத்துறை அமைச்சராகியவுடன் மாவின் விலையை அதிகரித்து அப்பாவிப் பொதுமக்களின் வயிற்றில் அடித்து விட்டார் என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியை சீர்குலைக்கப்போய் மகிந்த ராஜபக்ஷ தனது அரசாங்கத்திற்குள் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்.

இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து மேலும் சிலர் அரசாங்கத்துடன் இணையவிருப்பதாக வெளிவருகின்ற செய்தியில் உண்மை குறித்துப் பின்னரே தெரிவிக்க முடியும்.

எனினும் மனிதன் அரசியல் நடத்துவதனால் மனிதனை நாய் போல கட்டி வைத்துக் கொண்டு அரசியல் நடத்த முடியாது என்றார். (ச)

# ஆயுதக்கொள்வனவில் இடம் பெற்ற ஊழல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவும்

## சபையில் சுனில் ஹந்துன் நெத்தி

(கொழும்பு)

ஊழலில் ஈடுபட்ட அமைச்சர் ஒருவரையாவது அமைச்சர் பதவியிலிருந்து ஜனாதிபதி பதவி விலக்க வேண்டும். ஊழலில் ஈடுபடும் ஏனையவர்களுக்கு இது ஒரு பாடமாக அமைய வேண்டுமென்று ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி சபையில் தெரிவித்தார்.

அரச பொறுப்பு முயற்சிகள் குறித்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது; நாட்டில் இடம் பெறுகின்ற சர்வதேசத்துடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக ஆராய்வதற்கு அரச பொறுப்பு முயற்சிகள் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டங்களின்போது ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

காரணம் சர்வதேச மட்டத்தில் எமது நாடு ஆயுதக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டு வருகின்றது. கடந்த காலங்களில் ஆயுதக் கொள்வனவு ஊழல் இடம் பெற்றதாகவும் கூறப்படுகின்றது.

எனவே இவ் விடயங்கள் குறித்து ஆராய தெரிவுக்குழுவுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். இதேவேளை அரச பொறுப்பு முயற்சிகள் குறித்த தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் வெளிப்படையாக இடம் பெறவேண்டும்.

ஊழல்களில் ஈடுபடுகின்ற அமைச்சர்களையும் செயலாளர்களையும் ஜனாதிபதியே ஏன் பாதுகாத்துக்கொண்டிருக்கின்றார் என்று தெரியவில்லை.

எனவே ஊழல்களில் ஈடுபட்ட ஒரு அமைச்சரையாவது ஜனாதிபதி பதவி விலக்க வேண்டும். அமைச்சின் செயலாளர் ஒருவரையாவது பதவி விலக்கவேண்டும். அது ஊழல்களில் ஈடுபடுகின்ற ஏனையவர்களுக்கு பாடமாக அமையவேண்டும்.

வெளிவிவகார அமைச்சராக ரோஹித போகொல்லாகம நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் அவர் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக இருந்தபோது முதலீட்டுத் துறையில் இடம் பெற்ற அபிவிருத்தி குறித்து ஜனாதிபதி ஆராயவேண்டுமல்லவா?

அந்த வகையில் பாராளுமன்றம் தனது கடமையை சிறப்பாக செய்துள்ளது. ஆனால் நிறைவேற்று அதிகாரம் தனது கடமையை ஒழுங்காகச் செய்துள்ளதா என்ற சந்தேகம் எழுகின்றது என்றார். (ச)

# எட்டு ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வழங்க அரசு திட்டம்

(கொழும்பு)

இவ் வருடம் எட்டு ஆயிரம் பட்டதாரிகளுக்கு பொது நிர்வாகத்தில் வேலை வழங்கவுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. ஏற்கனவே 4 ஆயிரம் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதாக இனம் கண்டுள்ளோம்.

எனவே ஒரு பாடசாலையில் ஐந்து வருட ஒப்பந்தத்தில் ஆசிரியர்கள் சேவையில் இணைக்கப்படவுள்ளனர் என அரச வருமான மற்றும் நிதி அமைச்சர் ரஞ்சித் இயாம்பலபிட்டிய தெரிவித்தார்.

அதேவேளை கஷ்ட பிரதேசங்களில் நிலவும் ஆசிரிய பற்றாக்குறைகளுக்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஆயிரத்து 700 பட்டதாரிகள் அபிவிருத்தி மற்றும் நிதித்துறையில் இணைக்கப்படவுள்ளனர்.

அரச துறையில் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் 20 திணைக் களங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு இப் பட்டதாரிகள் இணைக்கப்படவுள்ளனர். (ச-3,5)

## சப்ரகமுவ...

பரீட்சை எழுதமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில்கொண்டு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கூட்டம் ஒன்றை நேற்று நடத்தியுள்ளது. (ச)

## அமைச்சுப் பதவிகளை...

வழங்கியிருக்கின்றனர். அமைச்சுப் பொறுப்புக்களை பெற்றுக்கொள்ளாமல் அரசின் பக்கம் சென்று ஆதரவு வழங்கியிருந்தால் நாங்கள் அதனைப் பாராட்டியிருப்போம்.

நேர்மையான முறையில் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அரசு செயற்படுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு வழங்கும். ஆனால் நாங்கள் எவரும் அமைச்சுப் பதவிகளை பெறமாட்டோம்.

எதிர்ப்பக்கம் இருந்து கொண்டே ஆதரவு வழங்குவோம். ஆனால் ,நேர்மையான முறையில் அரசு செயற்படுமா? இந்த சபையில் நாங்கள் பல போராட்டங்களை நடத்தியிருக்கின்றோம். ஆனால், செங்கோலை எடுத்து ஒளித்து நாங்கள் போராட்டம் நடத்தவில்லை.

கேவலம் இந்த சபையில் நாங்கள் பல அநாகரிகமான நடவடிக்கைகளை பார்த்திருக்கின்றோம். பௌத்த குருவின் காவியுடை களையப்பட்டது. செங்கோல் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றது.

அமைச்சர் ஒருவர் செங்கோலை எடுத்துச் சென்று ஒளித்துவைத்த காட்சியை இந்த சபையில் நாங்கள் பார்த்திருக்கின்றோம்.

ஆனால்; நாங்கள் போராட்டங்களை நடத்தியபோது இவ்வாறான கேவலமான செயற்பாடுகளை செய்யவில்லை. ஜனநாயக ரீதியாகவே நாங்கள் போராட்டங்களில் ஈடுபட்டோம். படுகொலை செய்யப்பட்ட ரவிராஜ் எம்.பி.ஜனநாயக நடவடிக்கையிலேயேதான் கவனம் செலுத்தியிருந்தார்.

வடக்கு கிழக்கிலே கொல்லப்படுபவர்கள் அனைவரும் புலிகள் என்று கூறுகின்றீர்கள். நீங்கள் வெளியிடும் எண்ணிக்கையைப் பார்த்தால் இன்று வடக்கு கிழக்கில் அனைத்து தமிழ் மக்களும் இறந்திருக்க வேண்டும்.

நீங்கள் சொல்வது போன்று இறந்தவர்கள் எல்லோருமே புலிகளாக இருந்தால் தமிழ் நாட்டில் இருந்துதான் ஆட்களை வரவழைத்து போராட்டம் நடத்தவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் என்றார். (ச-1)

## வன்செயல்களில் இருந்து நாட்டை மீட்க...

வன்செயல் மற்றும் யுத்த பொறிகளிலிருந்து மீட்டெடுப்பதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குமாறு அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் சமாதான பேரவை வேண்டுகோள் விடுப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

*இரு தசாப்த யுத்தம்*

ஐந்து ஆண்டுகால யுத்த நிறுத்த உடன்படிக்கை,அடுத்து என்ன என்ற தலைப்பில் இவ் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய சமாதான பேரவையினால் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்த உடன்படிக்கை நிறைவினையொட்டி 22 ஆம் திகதி நடத்தப்பட்ட சமாதானம் தொடர்பான கருத்தரங்கு பற்றி இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; 2002 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் விடுதலைப்புலிகளுக்கு எதிரான இரண்டு தசாப்த கால யுத்தம் முடிபுக்குக் கொண்டு வரப்பட்டது.

ஆனால், இன்று நிலைமை என்ன?

பெருமளவிலான உள்ளூர் இடப்பெயர்வுகள், அரசியல் படுகொலைகள், காணாமல் போதல், கடத்தல்கள், கட்டாயமாக சிறுவர்களை வளர்ந்தோரை படையில் சேர்த்தல், விமானத்தாக்குதல்கள் மற்றும் களமுனை மரணங்கள் என வன்செயல்கள் அதிகரித்து விட்டன.

சர்வதேச அளவில் மனித உரிமைகள் அதிகளவில் மீறப்படும் ஒரு நாடாக இலங்கை மீண்டும் மாறியுள்ளது. இத் தகைய சூழ்நிலையில் இலங்கை சமாதானப் பேரவையின் செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக் கருத்தரங்கில் நாடு முழுவதிலிருந்து 350 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நான்கு மதங்களைச் சேர்ந்த மதத் தலைவர்கள் இராணுவத் தீர்வைவிட பேச்சுவார்த்தை மூலமான தீர்வையே வலியுறுத்துகின்ற குடிசார் பிரதிநிதிகள் நோர்வே, அமெரிக்கா மற்றும் யப்பான் தூதுவர்கள் , கனடா , அவுஸ்திரேலியா நாடுகளின் உயர் ஸ்தானிகள் ஆகியோர் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு இலங்கை மக்களின் பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு, சமாதானம் மற்றும் அரசியல் சீர்திருத்தம் ஆகியவற்றுக்கான சர்வதேச ஆதரவினை தெரிவித்தனர்.

சர்வகட்சி பிரதிநிதிகளின் அரசியல் தீர்வுயோசனைகள், சர்வதேச சுயாதீன அவதானிப்பாளர்கள் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் ,குற்றங்களை விசாரிக்கும் விசாரணை ஆணைக்குழுவில் விசாரணைகளை அவதானித்தல் மற்றும் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தையினை மீள ஆரம்பித்தல் என்பன முக்கிய விடயங்களாக இங்கே முன்வைக்கப்பட்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

## கனனியில்...

நுட்பங்களைப் பயன்படுத்தி கனனிகள் மூலம் இந்த அடையாள அட்டை தயாரிக்கப்படும். கடலில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் போது அடையாள அட்டை வைத்திருக்கும் மீனவர்கள் பாதுகாப்பு பெறுவர் என்றும் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா மேலும் தெரிவித்தார். (ச)

## கண்காணிப்புக்...

அவர்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டதாகக் கூறினார்.

உரிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டதன் பின்னர் இன்னமும் ஓரிரு தினங்களில் அவர்கள் வவுனியா அலுவலகத்திற்கு திரும்பி விடுவார்கள் எனவும் தொர்பினூர் ஓமர்சன் மேலும் தெரிவித்துள்ளார். (எ-1)

## நான்காவது நாளாக...

பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டுமென்ற பிரதான கோரிக்கையை நீதி அமைச்சிடம் கைதிகள் முன்வைத் திருக்கின்றனர்.

தங்களை சொந்த மாவட்ட நீதிமன்றங்களில் ஆஜர் படுத்தி உறவினர்கள் பார்க்கக் கூடிய வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பீ.அரியனேந்திரன் ,த.கனகசபை ,நேரு சந்திரகாந்தன் மற்றும் கிஷோர் சிவநாதன் ஆகியோர் நேற்று கைதிகளைச்சந்தித்து உரையாடினர்.

குறிப்பாக தங்களை பார்வையிட யாழ். மாவட்டத்திலிருந்து வரும் உறவினர்களும் அவர்களுக்கு உதவியாக வருபவர்களும் வீடுதிரும்பிய பின்பு புலனாய்வுத் துறையினரால் அச்சுறுத்தப்படுவதாக கைதிகள் பலரும் தமது கவனத்திற்கு கொண்டு வந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் பீ.அரியனேந்திரன் தெரிவித்தார்.

கைதிகளில் சிலர் சோர்வடைந்த நிலையில் இருப்பதாகக்கூறிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தண்டனை பெற்ற கைதிகள் மற்றும் வழக்குத்தாக்கல்செய்யப்பட்ட கைதிகள் என மேலும் 13 பெண்கள் உட்பட 37 தமிழ் அரசியல் கைதிகள் சிறைச்சாலையில் இருப்பதாகவும் குறிப்பிட்டார். (ச-5)

## புலிகள் மூன்று முகாம்கள்...

வெளியிட்டிருக்கின்ற அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதல் சம்பவத்தின் போது எறிகணைகள் மற்றும் பல்குழல் பீரங்கித்தாக்குதல்கள் மூலம் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அம் முகாம்களில் இரண்டு, விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம்கள் எனவும் மற்றொரு முகாம் படையினர் மீது தாக்குதல் நடவடிக்கைக்காக பயன்படுத்தி வந்துள்ளதாகவும் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் முகாம்களில் நூற்றுக்கு மேற்பட்ட விடுதலைப்புலிகள் இருந்திருக்கலாம் எனவும் தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-3)

# மகிந்தவுக்கும் பிரபாகரனுக்குமிடையில்...

இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வுத் திட்டத்தை தயாரிப்பதற்கான சர்வகட்சி ஆலோசனைக் குழுவிடம் யோசனைகளை சமர்ப்பிக்காத சிறிலங்கா சுதந்திரக்கட்சியினாலோ அக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷவினாலோ பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் யோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மகிந்தவுக்கும் புலிகளின் தலைவர் பிரபாவுக்குமிடையில் ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட்டிருந்ததாக முன்னாள் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

மகிந்த-பிரபா ஒப்பந்தத்தை இந்த நாட்டு மக்களுக்கு அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத்தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது; கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய அரசியல் நிலை தொடர்பாக நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின் நாட்டில் புதிய அரசியல் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அந்தத் தேர்தலில் வாக்களிப்பதை வடக்கில் பிரபாகரன் புறக்கணித்தார்.

இதனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. ஜனாதிபதித் தேர்தலின்போது விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமை வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவுக்குமிடையில் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளதாக நாம் அன்றே தெரிவித்தோம்.

ஆனால் எமது கருத்தை இந் நாட்டு மக்கள் ஏற்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலை வடக்கு மக்கள் ஏன் புறக்கணித்தார்கள் என்ற சந்தேகம். இந்த நாட்டு மக்கள் மத்தியில் இருந்தது.

அந்த மக்கள் தேர்தலை புறக்கணித்தமையினால் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானார். மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகுவதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருந்தது என்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டு வருகிறது.

யானைக்கும் புலிக்குமிடையில் ஒப்பந்தம் ஒன்று இருப்பதாக தேர்தல் பிரசார நடவடிக்கையின் போது தெரிவித்திருந்தனர்.

ஆனால் அன்றைய தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேர்தல் ஏற்பாட்டாளராக இருந்த முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராட்சி, விடுதலைப்புலிகளுக்கும் சு.கவுக்குமிடையில் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டிருந்ததாக தற்போது தெரிவிக்கின்றார்.

இந்த ஒப்பந்தம் குறித்து அரசாங்கம் இந்த நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும் என்றார் அவர். (ச-5)


## புகையிலை அனுப்புதல்

தற்போது காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் கப்பலில் புகையிலை அனுப்புவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றது.

திருமலைக்கு புகையிலை அனுப்புபவர்கள் உடனே கீழ்க் காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே.இல. 021 222 2122

342, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C-623)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.02.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.